# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2189/5 - 2020 අගෝස්තු මස 17 වැනි සඳුදා - 2020.08.17

*2189/5 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய என்னால் ஒழுங்குபடுத்தப்பட்டு விதிக்கப்படுகின்ற விதிமுறைகள் ஆகும்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, ஓகத்து 17.*

**ஒழுங்கு விதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் 2020 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கம் கொண்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிமுறைகள் என அழைக்கப்படுகின்றது.

2. 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 2184/21 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கம் கொண்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிமுறைகள் இலக்கம் 3(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பொறுப்பேற்றல் குறிப்பு (ஜீ. ஆர். என்.) இலங்கை சுங்கத்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய கால எல்லை, அனுமதி செய்யப்பட்ட நாள் தொடக்கம் 120 நாட்கள் வரையானதாக திருத்தம் செய்யப்படுகின்றது.

3. இவ் ஒழுங்கு விதிகள் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதியிலிருந்து நடைமுறையில் இருக்கும்.

*9-317*


1A - PG 5117 — 620 (2020/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*